www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்:

நேரம்: 3.00 மணி **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

akwaacademy.blogspot.com

பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

1. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
   ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
   இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
   ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

2. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ............
   அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
   இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

3. இலக்கியத்தையும், மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்.
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

4. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

5. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

6. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



   அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.
   ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.
   இ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.
   ஈ) இவை அனைத்தும்

7. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

8. படிமம் என்பதன் பொருள்
   அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9. வேறுபட்டதைக் குறிப்பிடுக
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

10. திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

11. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) அறம் | - | 1) | கர்ணன் |
| ஆ) வலிமை | - | 2) | மனுநீதிச் சோழன் |
| இ) நீதி | - | 3) | பீமன் |
| ஈ) வள்ளல் | - | 4) | தருமன் |

அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

12. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

13. மகேந்திரவர்மனின் மத்தவிலாசம் என்ற நாடக நூலின் தமிழாக்கத்திற்கான மூலமொழி எது?
அ) இந்தி ஆ) ஆங்கிலம் இ) பிராகிருதம் ஈ) பிராமி

14. 'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்று சீவகசிந்தாமணி செய்யுள் அடிகள் சுட்டுவது
அ) மனைப்பயிற்சி ஆ) எழுத்துப்பயிற்சி இ) வித்யாரம்பம் ஈ) குழிமாற்று

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: 3×2=6

15. விடியல், வனப்பு இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.
16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
17. ஒரு முக எழினி, பொருமுக எழினி - குறிப்பு தருக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×2=4

19. பசுமைக் குடில் வாயுக்கள் யாவை?
20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 7×2=14

22. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவற்கும் உதவுவன எவை?
23. கீழ்க்காணும் சொல்லுருபைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க:
அ) விட்டான்

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



24. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி எழுதுக:* அ) வெங்கதிர் ஆ) தலைக்கோல்
25. *ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக :* அ) தந்தனன் ஆ) கலங்கி
26. *மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:*
    அ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
27. *கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக:*
    அ) குழந்தை, நட, தளிர் நடை, விழு
28. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:*
    அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
29. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:*
    அ) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.
30. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
    அ) ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

## பகுதி - III

### *பிரிவு - 1*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** **2×4=8**

31. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப்
    பூக்காடாம் வானமெல்லாம் - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** **2×4=8**

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்ல இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
37. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
38. சென்னை ஓர் அறிவின் நகரம் விளக்குக.

### *பிரிவு - 3*

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக:** **3×4=12**

39. வாகைத்திணை **(அல்லது)** செவியறிவுறூஉ துறையை விளக்குக.
40. பொருள் வேற்றுமை அணி **(அல்லது)**
    சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
    ஏமப் புணையைச் சுடும் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. தமிழாக்கம் தருக :

1. Learning is a treasure that will follow its Owner everywhere.
2. A new language is a new life.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my language are the limits.

42. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

akwaacademy.blogspot.com- திரிகூட ராசப்பக் கவிராயர்

43. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:

அ) யானைக்கும் அடிசறுக்கும் (அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 3×6=18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. (அல்லது)

ஆ) கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக: 4+2=6

47. அ) "துன்பு உளது எனின் " - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "மகற்கு' - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

------------

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com